# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109471

1. District / மாவட்டம்: திருவாரூர் PS / காவல்நிலையம்: V&AC Year / ஆண்டு: 2023 FIR No. / முதல் அ. எண்: 6 Date / நாள்: 16.10.2023

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Act 1988 as amended Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: 2018 Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 15/9/2023 - VAO office பெருமாளகரம்
   12/10/2023 - VAO office உள்ளிமை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 16/10/2023 - Through cell phone
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time நேரம் 16.10.2023 - 14.00 hrs
   FIR 16.10.2023 - 16.15 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் - do -

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமான புகார் மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் VAO அலுவலகம், பெருமாளகரம் 17 km மேற்கு.
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி :
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த காநி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. மரியபுகன்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ராமையன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 66/2023
   (d) Nationality : நாட்டினம்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விவசாயம்
   (g) Address : முகவரி 1/38 படுவணந்தெரு, கொரடாச்சேரி போஸ்ட், நீடாமங்கலம் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திருமதி சுதா, கிராம நிர்வாக அலுவலர், உள்ளிமை கிராமம் (பொ) பெருமாளகரம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது:

திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் திருமதி. D.அனிதாஆரோக்கியமேரி ஆகிய நான் 16.10.2023-ந் தேதி 14.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது திரு.R.மதியழகன், என்பவர் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புதல்: R.மதியழகன், வயது 66/2023 த/பெ. ராமையன், 1/38 பழவனக்குடி, கொரடாச்சேரி, நீடாமங்கலம் தாலுக்கா, திருவாரூர். பெறுதல்: காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். ஐயா, நான் திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி, பழவனக்குடியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் சொந்தமாக விவசயாம் செய்து வருகிறேன். என்னுடன் பிறந்தவர்கள் 8 நபர்கள். அதில் என்னுடன் சேர்த்து 6 ஆண்கள், 3 பெண்கள் எனது மூத்த அக்கா மங்கையர்கரசி இறந்து விட்டார்கள். எங்களது குடும்பத்திற்க்கு சொந்தமான பூர்விக சொத்துக்கள் நீடாமங்கலம் தாலுக்கா கிருஷ்ணன்கோட்டகம் கிராமத்தில் சுமார் 25 மா உள்ளது. அது பெருமாளகரம் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு உட்பட்டது. எனது அப்பா இறந்த பின்னர் கடந்த 2015ஆம் ஆண்டு எங்களது பூர்விக சொத்துக்களை அனைவருக்கும் நீடாமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 1992/2015 பிரகாரம் பாகபாத்தியம் செய்து பதிவு

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS ................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறைப்பட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறைப்பட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் D.அனிதா ஆரோக்கியமேரி
Rank: நிலை காவல் ஆய்வாளர் ........No. எண் ...... VEAC, திருவாரூர்.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

(குற்ற எண். 06/2023 FIR-ன் தொடர்ச்சி....)

செய்து கொண்டோம். அதில் எனக்கு 5 மாவும், எனது தம்பி மாசிலாமணிக்கு 4 1/2 மாவும் பிரிக்கப்பட்டது. அதில் எனது பெயருக்கு புல எண். 44/3 (பரப்பு 0.18.50 ஹெக்டேரில் 0.46 சென்டையும், புல எண். 57/1A1 (பரப்பு 1.10.50)-ல் ஏக்கர் 1.07 சென்டையும் ஆக எனது தம்பி மாசிலாமணி அவர் வசம் இருந்த 4 ½ மா நிலத்தையும் சேர்த்து, 21.08.2023ஆம் தேதி நீடாமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 1632/2023-ன் படி எனக்கு தானசெட்டில்மெண்ட் செய்து கொடுத்தார். அதற்கான ஒப்புகை சீட்டு அன்றைய தினமே நீடாமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் எனக்கு வழங்கினார்கள். மூன்று தினங்களுக்குள் உங்களுக்கு பட்டா மாறுதல் ஆகிவிடும் என்று நீடாமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கூறி அனுப்பினார்கள். அதன்பேரில் புல எண்.44/3-க்கான பட்டா பெயர் மாற்றம் பட்டா எண்.807-ன் படி 12.09.2023 ஆம் தேதி எனது பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுவிட்டது. அதனை நான் ஆன்லைன் மூலம் தெரிந்து கொண்டேன். அதில் எஞ்சிய புல எண்.57/1A1 -ற்கான பட்டா எனது பெயருக்கு மாறாமல் இருந்தது. அது தொடர்பாக பத்திரம் பதிவு செய்து பத்து தினங்களுக்கு பின்னர் 15/09/2023-ந் தேதி நான் ஊர்குடி கிராம நிர்வாக அலுவலர் திருமதி.சுதா (பொறுப்பு) பெருமாளகரம் என்பவரை பெருமாளகரம் கிராம நிர்வாக அலுவலகத்தில் நான் சென்று பார்த்தேன். கிருஷ்ணன்கோட்டகம் கிராம சர்வே எண். 57/1A1 இடமானது கூட்டு பட்டாவாக இருப்பதால் அதன் மூலபத்திரம் கேட்டார். நான் மூலப்பத்திரத்தின் நகல்களை அவரிடம் கொடுத்தேன். VAO பத்திரங்களை வாங்கி பார்த்துவிட்டு பட்டாவை பெற்றுதர லஞ்சமாக ரூ.6000/- கேட்டார். நான் பணம் ஏற்பாடு செய்து வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் எனக்கு உடல்நிலை சரியில்லாததால் கோயம்புத்தூரில் உள்ள எனது மகள் வீட்டிற்கு தங்கி மருத்துவம் செய்து விட்டு கடந்த 1 வாரத்திற்கு முன்புதான் பழவனக்குடி வந்தேன். பின்னர் 12.10.2023-ம் தேதி மதியம் சுமார் 01.30 மணியளவில் ஊர்குடி VAO அலுவலகத்திற்கு சென்று VAO சுதாவை சந்தித்து மேற்படி பட்டா மாற்றம் செய்வது தொடர்பாக (சம்மந்தமாக) கேட்டேன். அதற்கு அவர் ஏற்கனவே புல எண்.44/3 -ற்கு பட்டா பெயர் மாற்றம் செய்து கொடுத்துவிட்டேன். அதற்கு நீங்கள் இதுவரை பணம் தரவில்லை. அதனால் புல எண்.57/1A1-க்கு பட்டா மாற்றம் செய்வது தொடர்பான உங்கள் விண்ணப்பத்தை கேன்சல் செய்துவிட்டேன் என்று நினைக்கிறேன். எனவே புல எண்.57/1A1-க்கு பட்டா மாற்றம் செய்து தரவேண்டும் என்றால், இரண்டு பட்டா மாறுதலுக்கும் சேர்த்து ரூ.6000/- கொடுத்தால்தான் பட்டா மாற்றம் செய்து தருவேன் என்று கூறிவிட்டார். பின்னர் அன்றைய தினம் மாலை சுமார் 06.15 மணியளவில் மேற்படி VAO சுதா எனது செல்போனுக்கு போன் செய்து தங்களுடைய விண்ணப்பம் கேன்சல் செய்யப்படவில்லை என்றும், ஏற்கனவே பட்டா மாற்றம் செய்யப்பட்டது மற்றும் தற்போது பட்டா மாற்றம் செய்ய வேண்டியது இரண்டுக்கும் சேர்த்து ரூ.6000/- பணம் எடுத்து வாருங்கள், நான் பரிந்துரை செய்து பட்டா பெற்று தருகிறேன் என்று தெரிவித்தார். இன்று 16.10.23 ஆம் தேதி நான் எனது செல்போனிலிருந்து VAO சுதாவிற்கு போன் செய்து பட்டா மாறுதல் குறித்து கேட்டதற்கு அவர் நான் ஏற்கனவே கேட்ட லஞ்சப்பணத்துடன் நாளை என்னிடம் வந்து கொடுத்துவிட்டு பட்டா மாறுதல் ஆணையினை பெற்றுக்கொள்ளுமாறு VAO சுதா என்னிடம் சொன்னார். ஆனால் பட்டா மாற்றத்திற்காக VAO சுதா லஞ்சமாக கேட்ட ரூ.6000/- பணத்தை தருவதற்கு எனக்கு மிகவும் மனஉளைச்சல் ஏற்பட்டது. பின்னர் அதைப்பற்றி யோசித்துக்கொண்டே

(குற்ற எண். 06/2023 FIR-ன் தொடர்ச்சி...,)

இருந்தேன். எனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்து தருவதற்கு, VAO சுதா லஞ்சமாக ரூ.6000/- கேட்டதை கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே மேற்படி VAO சுதா மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கு புகாரினை தயார் செய்து கொண்டு 16.10.2023-ந் தேதி திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து புகார் அளிக்கிறேன். இந்த புகாருடன் நீடாமங்கலம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 1632/2023 நகல் மற்றும் அங்கு அளிக்கப்பட்ட ஒப்புகை சீட்டு நகல், பட்டா எண்.585, 807 ஆகியவற்றிற்கான கம்பியூட்டர் சிட்டா நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். எனவே பட்டா பெற்றுதர என்னிடம் லஞ்சமாக கேட்ட ரூ.6000/- பணத்தை கொண்டுவந்துள்ளேன். விசாரித்து அவர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள Sd (xxxxxxxxxxx) R.மதியழகன் 16.10.23) அய்யா, மேற்படி புகாரின் பேரில் உத்தரவுபடி எதிரி மீது முன்விசாரணை செய்து இப்புகார்மனு மீது திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 06/2023 ச/பி 7 of Prevention of Corruption Act 1988 as amended 2018-ன் படி 16.10.2023-ந் தேதி மாலை 16.15 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. Sd (XXXXXX) 16.10.2023 D.அனிதா ஆரோக்கிய மேரி, Inspector of Police, V&AC, Thiruvarur.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு மற்றும் இணைப்புகளுடன் கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருவாரூர் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல் தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பில் வைக்கப்பட்டது.

D. Anitha
16/10/23
(D.அனிதா ஆரோக்கியமேரி)
Inspector of police
V & AC.
Thiruvarur.